மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள். (குறுக்கீடு) திரு. S. செம்மலை, (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

5. ஓய்வுபெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்தக் கடுமையான நிதி நெருக்கடியிலும், போக்குவரத்துக் கழகங்களின் நிதி நெருக்கடியைக் கருத்தில்கொண்டு விதி 110—ன்கீழ் 750 கோடி ரூபாய் நிதியை வழங்கிய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு காலகட்டங்களில் நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்தபோது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தக்கூடிய, தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு சுமார் 10,000 கோடி ரூபாய் அளவிற்கு டீசல் மானியமாகவும், நிதியாகவும், அகவிலைப் படியாகவும் மற்றும் பல்வேறு இனங்களில் நிதிகளை கொடுத்திருக்கிறார்கள். மேலும், ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரை 9,676 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 11—55

அதுமட்டுமல்ல, இன்றைய காலகட்டத்திலே சுமார் 1,000 கோடி ரூபாய் அளவிற்கு ஊதிய உயர்வு ஒப்பந்தப் பேச்சுவார்த்தை முடிவுற்று இருக்கின்ற இந்த நிலையிலே, சில தொழிற்சங்கங்களின் தவறான வழிகாட்டுதலின் காரணமாக, கடந்த ஐந்து/ஆறு நாட்களாக போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பொங்கல் பண்டிகை வர இருக்கின்ற இந்த நேரத்திலே, 2011 தி.மு.க. ஆட்சிக் காலத்திலே போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு தரப்படாமல்

2018 ஜனவரி 10] **[திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்]**

நிறுத்தி வைத்திருந்த நிலுவைத் தொகையான 922 கோடி ரூபாயும் சேர்த்து ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு இதுவரையிலும் இந்த அரசு 2,147.39 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறது என்பதை இந்த அவையில் பதிவு செய்கிறேன். இன்றைய நிலவரப்படி, நவம்பர் 2017 வரை ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகையாக இருக்கக்கூடிய சுமார் 750 கோடி ரூபாய் வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதிய ஒப்பந்தம் பற்றி போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய ஊதிய ஒப்பந்தத்தின்போது பேசலாம் என்று எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் சொன்னார்கள். ஆனால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஊதிய ஒப்பந்தம் அல்ல, சம்பள உயர்வு.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஊதிய உயர்வை போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு வழங்கிய அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்து இந்த நிதியை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.*

***திரு. S. செம்மலை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கிற இந்தத் தீர்மானத்தின்மீது எனக்கு பேச வாய்ப்பளித்த தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் விவாதத்தைத் துவக்கி வைத்தார்கள். இரண்டாவது நாளான இன்று என்னைப் பேச அனுமதித்து*